<u>முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>
<u>முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,</u>
<u>முதன்மை சார்பு நீதிபதி.</u>
**<u>O.S.No.173/2021</u>**

பெயர் : சீத்தாராமன் (PW2)

த/பெ. : ராமானுஜம்

தேதி : 27.07.2026.

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டது.
பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:–

எனக்கு நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிக்க சம்மன் எதுவும் வரவில்லை என்றால் சரிதான். வாதி சரவணன் என்னை அழைத்ததன்பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கு வாதியை எப்படி தெரியும் என்றால் நான் ஏற்கனவே வாதி ஊரான குத்தாலத்தில் வசித்தேன் அதன் மூலம் எனக்கு அவரை தெரியும். நான் சாட்சி கையெழுத்து போட்டதாக சொல்லப்படும் ஆவணம் பத்திரத்தில் எழுதப்பட்டதா என்றால் இல்லை. என்ன வேலை செய்து வருகிறீர்கள் என்றால் நான் விவசாய வேலை பார்த்து வருகிறேன். கிரய உடன்படிக்கை ஆவணம் என்பது பதிவுசெய்யப்பட்டதாக இருக்கவேண்டும் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் கைரசீது ஆவணம் எங்கு வைத்து போட்டேன் என்றால் சுகுமார் வீட்டில் வைத்து போட்டேன். கைரசீது எழுதும்போது யார் யார் அங்கு இருந்தார்கள் என்றால் 3 சாட்சிகள் மற்றும் சரவணன் உடன் இருந்தார். அங்கு 3 சாட்சிகளை யார் அழைத்து வந்தார் என்றால் சரவணன் தான் அழைத்து வந்தார். கைரசீதில் முதல் கையெழுத்து யார் போட்டார் என்றால் கணேசன் போட்டார். கைரசீது ஆவணத்தை எழுதியவர் என்ற இடத்தில் யார் கையொழுத்து போட்டார் என்றால் சுகுமார் தான் கையொப்பம் செய்துள்ளார்.

நானும் சரவணனும் நெருங்கிய நண்பர் என்பதால் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மோசடியாக தயார் செய்த ஆவணத்திற்கு பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் பிரதிவாதி எந்த ஆவணமும் எழுதிக்கொடுக்கவில்லை, எந்தவொரு பணமும் வாதியிடம் வாங்கவில்லை என்றால் சரியல்ல. நான் வாதிக்கு வேண்டியவர் என்பதால் தான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.